முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2020 யூலை

## (302) முகாமைக் கணக்கீடும் நிதியும்

(Management Accounting and Finance)

2020-10-04
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) ***கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*
  (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) முகாமைக் கணக்கீடும் நிதிக் கணக்கீடும் ஒரு நிறுவனத்தின் வேறுபட்ட நோக்கங்களை அடைய உதவுகின்றன. நிதிக் கணக்கீடானது உள்ளக மற்றும் வெளிவாரி நாட்டதாரர்களுக்கு தகவல்களை வழங்கும் அதேவேளை முகாமைக் கணக்கீடானது அநேகமாக உள்ளக நாட்டதாரர்களுக்குத் தகவல்களை வழங்குகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

ஒரு நிறுவனத்திற்கு முகாமைக் கணக்கீட்டின் அனுகூலங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(b) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி**யின் **உற்பத்திப்பொருள் W** க்கான நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **ரூபா (அலகொன்றிற்கு)** |
|---|---|
| நேர் பொருள் | 24 |
| நேர் கூலி | 16 |
| மாறும் மேந்தலைகள் | 8 |
| விற்பனை விலை | 62 |

மாதமொன்றிற்கான நிலையான மேந்தலை ரூபா 185,360/-. 2020 செப்ரெம்பர் மாதத்திற்கான உற்பத்தி / விற்பனை 15,460 அலகுகள்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக:**

(i) சமப்பாட்டுப் புள்ளி (BEP) அலகுகளில்

(ii) காப்பெல்லை (margin of safety) அலகுகளில் (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

ஒரு நிறுவனத்தின் பலதரப்பட்ட நோக்கங்களையும் அடைந்துகொள்வதற்கு ஏதுவாக பாதிடல் மேற்கொள்ளப்படுவதால், பல நிறுவனங்களிலும் ஒரு முக்கிய செயன்முறையாக பாதிடல் (budgeting) கருதப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒரு நிறுவனத்தின் பாதிடல் செயன்முறையின் இரண்டு (02) நோக்கங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) காசு மிகை (cash surplus) காணப்படும் சந்தர்ப்பமொன்றில் ஒரு நிறுவனம் கடைப்பிடிக்கக்கூடிய இரண்டு (02) தந்திரோபாயங்களைக் (strategies) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட டிரேட் கம்பனியின்** 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான / முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

*(ரூபா)*

| | **2019/20** | **2018/19** |
|---|---|---|
| விற்பனை | 5,671,500 | 4,500,000 |
| விற்பனைக் கிரயம் | 5,000,000 | 4,150,000 |
| இறுதித் தொக்கு | 1,120,000 | 880,000 |
| வியாபார வருமதிகள் | 455,500 | 321,500 |

2019/20 ஆம் ஆண்டிற்கான வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம் 35 நாட்கள்.

எல்லா விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2019/20 ஆம் ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட டிரேட் கம்பனியின்** செயற்படு மூலதனச் சுற்றுக் (working capital cycle) காலத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) வியாபாரச் சென்மதித் தீர்ப்பனவுக் காலத்தினை மேம்படுத்துவதற்கு **வரையறுக்கப்பட்ட டிரேட் கம்பனி** பயன்படுத்தக் கூடிய இரண்டு (02) தந்திரோபாயங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட கெயின்ஸ் கம்பனி** ரூபா 16,500,000/- இனை ஆரம்ப மூலதன முதலீடாகக் கொண்ட புதிய செயற்றிட்டம் ஒன்றில் முதலீடு செய்ய எண்ணுகிறது. பின்வரும் நிகரக் காசுப் பாய்வுகள் அடுத்த 5 ஆண்டுகளுக்கான செயற்றிட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன:

| **ஆண்டு** | **நிகர காசுப் பாய்வு (ரூபா)** |
|---|---|
| 1 | 3,580,000 |
| 2 | 4,900,000 |
| 3 | 5,395,000 |
| 4 | 5,745,000 |
| 5 | 6,250,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) செயற்றிட்டத்தின் மீள்செலுத்துகைக் காலத்தை (payback period) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) மீள்செலுத்துகைக் காலத்தின் அடிப்படையில் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என காரணங்கூறி **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட சாம்ப் கம்பனி** 2020 ஆம் ஆண்டிற்கான மாதாந்தப் பாதீடுகளைத் தயாரித்துள்ளது.

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் 2020 அக்டோபர் முதல் டிசெம்பர் வரையான காலத்திற்கான மாதாந்தப் பாதிடப்பட்ட வருமானக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன:

*(ரூபா)*

| | அக்டோபர் | நவெம்பர் | டிசெம்பர் |
|---|---|---|---|
| விற்பனை | 700,000 | 800,000 | 900,000 |
| விற்பனைக் கிரயம்: | | | |
| ஆரம்பத் தொக்கு | 145,000 | 166,000 | 195,000 |
| கொள்வனவு | 480,000 | 560,000 | 587,000 |
| இறுதித் தொக்கு | (166,000) | (195,000) | (198,000) |
| விற்பனைக் கிரயம் | (459,000) | (531,000) | (584,000) |
| **மொத்த இலாபம்** | **241,000** | **269,000** | **316,000** |
| விநியோகச் செலவுகள் | (32,000) | (35,000) | (41,000) |
| நிருவாகச் செலவுகள் | (56,000) | (66,000) | (76,000) |
| | **153,000** | **168,000** | **199,000** |
| நிதிச் செலவுகள் | (20,500) | (21,800) | (21,400) |
| வரிக்கு முன் இலாபம் | **132,500** | **146,200** | **177,600** |
| வருமான வரி | (19,000) | (20,000) | (25,000) |
| **நிகர இலாபம்** | **113,500** | **126,200** | **152,600** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) விற்பனைப் பெறுவனவுகள் – ஒரு குறிப்பிட்ட மாத விற்பனையின் 60% அதே மாதத்திலும் 30% அடுத்த மாதத்திலும் 8% அதற்கு அடுத்த மாதத்திலும் பணமாகப் பெறப்படும். 2% அறவிடமுடியாக் கடனாகக் கருதப்படுவதுடன் அது மேற்படி செலவினங்களில் செம்மையாக்கம் செய்யப்படவில்லை.

(2) கொள்வனவுக்கான கொடுப்பனவுகள் – 20% கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட அதே மாதத்திலும் எஞ்சிய தொகை அடுத்த மாதத்திலும் தீர்ப்பனவு செய்யப்படுகிறது.

(3) விநியோகச் செலவுகளுக்கான கொடுப்பனவுகள் – 15% அதே மாதத்திலும் எஞ்சிய தொகை அடுத்த மாதத்திலும் செலுத்தப்படுகிறது.

(4) நிருவாகச் செலவுகளுக்கான கொடுப்பனவுகள் – மாதம் ரூபா 16,000 இனை தேய்மானமாக உட்படுத்தும் நிருவாகச் செலவுகள் அதே மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

(5) மாதாந்தக் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்ட வரி, ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் செலுத்தப்படுகிறது.

(6) பெறப்பட்ட கடனின் மீள்கொடுப்பனவு காலாண்டு அடிப்படையில் மார்ச், யூன், செப்ரெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. வட்டியுடனான காலாண்டுக் கடன் தவணைக் கட்டணம் ரூபா 250,000/-. நிதிச் செலவுகள் பெறப்பட்ட கடனுக்கான வட்டியைப் பிரதிபலிப்பதுடன் ஒவ்வொரு மாதமும் அட்டுறு செய்யப்படுகின்றன.

(7) பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய பங்கிலாபம் ரூபா 400,000/- ஆனது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அது டிசெம்பர் மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்.

(8) கம்பனியானது ரூபா 2.4 மில்லியன் கிரயத்தில் புதிய இயந்திரமொன்றினைக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதுடன் இந்தத் தொகை 2020 டிசெம்பர் மாதத்தில் ஆரம்பித்து 6 சமனான மாதாந்தத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தப்படும்.

(9) 2020 நவெம்பர் 30 ஆந் திகதியில் மதிப்பிடப்பட்ட காசு மீதி ரூபா 1,474,000/-.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2020 டிசெம்பர் மாதத்திற்கான காசுப் பாதீட்டினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ஸ்டார் கம்பனி X, Y, Z** எனும் மூன்று வேறுபட்ட பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. இந்த மூன்று பொருட்களும் தொடர்பான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | **அலகொன்றிற்கு** | | |
|---|---|---|---|
| | **X** | **Y** | **Z** |
| நேர் பொருள் (கிலோகிராமொன்று ரூபா 250 வீதம்) (கி.கிராம்) | 1 | 1.6 | 2.2 |
| நேர் கூலி: | | | |
| திறமையான கூலி (மணித்தியாலமொன்றிற்கு ரூபா 400 வீதம்) (மணித்.) | 0.5 | 1 | 0.8 |
| திறமையற்ற கூலி (மணித்தியாலமொன்றிற்கு ரூபா 280 வீதம்) (மணித்.) | 1 | 1.25 | 1.5 |
| அலகொன்றிற்கான மாறும் மேந்தலைகள் (திறமையான மற்றும் திறமையற்ற கூலி மணித்தியாலங்கள் மீது மணித்தியாலமொன்றிற்கு ரூபா 120) | | | |
| விற்பனை விலை (ரூபா) | 1,100 | 1,500 | 1,850 |
| கேள்வி (அலகுகள்) | 4,000 | 5,000 | 2,500 |

2020 டிசெம்பர் மாதத்திற்கான உயர்ந்தபட்ச திறமையான கூலி மணித்தியாலங்களின் கிடைப்பனவு 8,400 மணித்தியாலங்கள்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வளக் கிடைப்பனவின் அடிப்படையில் 2020 டிசெம்பர் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட ஸ்டார் கம்பனியின்** உத்தம உற்பத்திக் கலவையை (optimal production mix) **கணிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

**பெட்ரோ PLC** ஆனது கீழ்வரும் மூலதனக் கட்டமைப்பைக் கொண்ட ஒரு நிரற்படுத்திய கம்பனியாகும்:

| | **பங்குகளின் / தனிச்சங்களின் எண்ணிக்கை** | **பங்கொன்று அல்லது தனிச்சமொன்று வழங்கிய விலை (ரூபா)** | **பங்கொன்றின் / தனிச்சமொன்றின் சந்தை விலை (ரூபா)** |
|---|---|---|---|
| சாதாரண பங்குகள் | 40,000,000 | 12 | 9 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள் | 5,000,000 | 8 | 6.40 |
| 11.5% மீட்கப்படக்கூடிய தனிச்சங்கள் | 2,800,000 | 100 | 95 |

(1) 2019/20 ஆம் ஆண்டில் கம்பனி சாதாரண பங்கிலாபமாக பங்கொன்றிற்கு ரூபா 1.20 இனைச் செலுத்தியது. பங்கிலாபம் ஆண்டிற்கு 5% இனால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(2) முன்னுரிமைப் பங்குகளுக்கான வருடாந்தப் பங்கிலாபம் - பங்கொன்றிற்கு ரூபா 1.20 ஆகும்.

(3) தனிச்சங்கள் இன்னும் 6 ஆண்டுகளில் தனிச்சமொன்று ரூபா 100/- வீதம் மீட்கப்படவுள்ளது.

(4) கம்பனியானது ஆண்டிற்கு 14% இல் வருமான வரி செலுத்துகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(a) சாதாரண பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(b) மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் (02 புள்ளிகள்)

(c) மீட்கப்படக்கூடிய தனிச்சங்களின் கிரயம் (03 புள்ளிகள்)

(d) சந்தைப் பெறுமதியைப் பாவித்து மூலதனத்தின் நிறையேற்றிய சராசரிக் கிரயம் (WACC) (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட W கம்பனி பொருள் X** இனை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. கீழ்வரும் தகவல்கள் **பொருள் X** இன் நியமக் கிரய அட்டையிலிருந்து பிரித்தறியப்பட்டன:

| | **அலகொன்றுக்கு (ரூபா)** |
|---|---|
| நேர் பொருள்: | |
| **பொருள் A** (1 லீற்றர் - லீற்றரொன்று ரூபா 80 வீதம்) | 80 |
| **பொருள் B** (2.5 லீற்றர் - லீற்றரொன்று ரூபா 120 வீதம்) | 300 |
| நேர் கூலி (2 மணித்தியாலம் - மணித்தியாலமொன்று ரூபா 180 வீதம்) | 360 |
| மாறும் மேந்தலைகள் (2 மணித்தியாலம் - மணித்தியாலமொன்று ரூபா 70 வீதம்) | 140 |
| மொத்த மாறும் கிரயம் | 880 |
| விற்பனை விலை | 1,090 |
| **பங்களிப்பு** | **210** |

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு பாதிடப்பட்ட விற்பனை / உற்பத்தி - 35,000 அலகுகள்.

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உண்மையான பெறுபேறுகள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| உண்மையான விற்பனை/ உற்பத்திக் கணியம் | | 22,340 அலகுகள் |
| விற்பனைப் பெறுமதி | (ரூபா) | 24,685,700 |
| நேர் பொருள்: | | |
| **பொருள் A** (23,400 லீற்றர்) | (ரூபா) | 1,825,200 |
| **பொருள் B** (51,500 லீற்றர்) | (ரூபா) | 6,695,000 |
| நேர் கூலிக் கிரயம் (43,500 மணித்தியாலம்) | (ரூபா) | 8,526,000 |
| மாறும் மேந்தலைகள் | (ரூபா) | 3,132,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக**:

(a) நேர் பொருள் விலை முரண் (03 புள்ளிகள்)

(b) நேர் பொருள் கலவை முரண் (04 புள்ளிகள்)

(c) நேர் பொருள் விளைவு (Yield) முரண் (04 புள்ளிகள்)

(d) நேர் கூலி விகித முரண் (02 புள்ளிகள்)

(e) நேர் கூலி வினைத்திறன் முரண் (02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 09

**வரையறுக்கப்பட்ட றைட் கம்பனி** தற்போது ரூபா 32 மில்லியன் ஆரம்ப முதலீட்டுடனான ஒரு புதிய உற்பத்திப் பொருளை அறிமுகப்படுத்த எண்ணுகிறது. இந்த ஆரம்ப முதலீட்டில் ரூபா 23 மில்லியன் எந்திரம் மீதான மூலதனச் செலவாகவும் ரூபா 9 மில்லியன் தொழிற்படு மூலதனத்திற்காகவும் செலவிடப்படும். எந்திரத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும்.

அடுத்த 5 ஆண்டுகளுக்கான புதிய உற்பத்திப் பொருள் தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| **ஆண்டு** | **ஆண்டொன்றிற்கான மொத்தப் பங்களிப்பு (ரூபா மில்லியன்)** |
|---|---|
| 1 | 8.4 |
| 2 | 8.3 |
| 3 | 10.2 |
| 4 | 12.0 |
| 5 | 12.5 |

எந்திரம் மீதான தேய்மானம் அடங்கலாக ஆண்டொன்றிற்கான நிலையான கிரயமாக ரூபா 6,000,000/- மதிப்பிடப்பட்டுள்ளது. கம்பனி ஆண்டிற்கு 14% இல் வருமான வரியை அந்த ஆண்டிலேயே செலுத்துகிறது. வரித் தேவைகளுக்காக எந்திரம் மீதான மூலதன விடுதொகை ஆண்டிற்கு 25% இல் கோரப்பட முடியும். தொழிற்படு மூலதனம் 5 ஆம் ஆண்டின் இறுதியில் மீளப் பெறப்படும்.

கம்பனியின் மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 12%.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) முதலீட்டின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) **கணிக்குக.** (08 புள்ளிகள்)

(b) மேற்படி முதலீட்டின் நிலைப்புத்தன்மையை (viability) **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 10

(a) **வரையறுக்கப்பட்ட P கம்பனி** பல செயன்முறைகள் ஊடாக **பொருள் A** இனை உற்பத்தி செய்கின்றது. 2020 யூன் மாதத்திற்கான **செயன்முறை I** தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| நேர் பொருள் | 2,800 கிலோகிராம் - கிலோகிராமொன்று ரூபா 80/- |
| நேர் கூலி | ரூபா 118,350/- |
| மாறும் மேந்தலைகள் | ரூபா 70,200/- |

2020 யூன் மாத முடிவில் **செயன்முறை I** இலிருந்து **செயன்முறை II** இற்கு மாற்றப்பட்ட மொத்த வெளியீடு 2,500 கிலோகிராம். நேர்பொருள் உள்ளீட்டின் 5% சாதாரண இழப்பாக உள்ளதுடன் இவற்றை கிலோகிராம் ஒன்று ரூபா 23/- விலையில் விற்பனை செய்ய முடியும்.

இறுதிப் புத்துருவாகும் வேலைகள் (WIP) 150 கிலோகிராம் இருந்ததுடன் அவற்றின் பூர்த்தி மட்டங்கள் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| நேர் பொருள் | 100% |
| நேர் கூலி | 80% |
| மாறும் மேந்தலைகள் | 60% |

**நீங்கள் செய்யவேண்டியது:**

சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் (Statement of Equivalent Units & Cost) **செயன்முறை I** கணக்கையும் **தயாரிக்குக.**

(15 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட பீதர் கம்பனி** தலையணைகளை உற்பத்திசெய்து விற்பனை செய்கிறது. கம்பனி தற்போது புதிய வகையான தலையணைகளை அறிமுகப்படுத்த எண்ணுவதுடன் அதற்கான சந்தைப்படுத்தல் வியூகங்களையும் (marketing campaign) மதிப்பாய்வு செய்கிறது.

சந்தைப்படுத்தல் ஆலோசகர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கம்பனிக்குக் கீழ்வரும் மாற்றுத் தெரிவுகள் (குறைந்த பாதீடு மற்றும் உயர்ந்த பாதீடு) கிடைக்கப் பெற்றுள்ளன:

| **கேள்வி** | **சந்தைப்படுத்தல் வியூகம்** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **குறைந்த பாதீடு** | | | **உயர்ந்த பாதீடு** | | |
| | **கேள்வியின் நிகழ்தகவு** | **எதிர்பார்க்கும் விற்பனை (அலகுகள்)** | **அலகொன்றின் எதிர்பார்க்கும் விற்பனை விலை (ரூபா)** | **கேள்வியின் நிகழ்தகவு** | **எதிர்பார்க்கும் விற்பனை (அலகுகள்)** | **அலகொன்றின் எதிர்பார்க்கும் விற்பனை விலை (ரூபா)** |
| உயர்ந்த | 0.2 | 100,000 | 1,200 | 0.5 | 130,000 | 1,250 |
| நடுத்தர | 0.4 | 70,000 | 1,400 | 0.3 | 120,000 | 1,480 |
| குறைந்த | 0.4 | 40,000 | 1,500 | 0.2 | 75,000 | 1,540 |

பாவிக்கப்படும் சந்தைப்படுத்தல் வியூகங்களின் அடிப்படையில், மேலே காட்டியவாறு வேறுபட்ட கேள்வி மட்டங்களுக்கு அமைய விலைகளும் மாறுபடும்.

உற்பத்திப் பொருளின் மாறும் கிரயம் அலகொன்றுக்கு ரூபா 1,150/-.

குறைந்த பாதீட்டு வியூகத்திற்கு ரூபா 5.8 மில்லியன் கிரயமாகும் அதேவேளை உயர்ந்த பாதீட்டு வியூகத்திற்கு ரூபா 14.5 மில்லியன் கிரயமாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**வரையறுக்கப்பட்ட பீதர் கம்பனி** பயன்படுத்த வேண்டிய சந்தைப்படுத்தல் வியூகத்தினை **மதிப்பிடுக.**

*(உமது விடைக்கு ஆதரவாக கணிப்பீடுகளைத் தருக.)* (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |